දේශීය ආදායම් දෙපාර්තමේන්තුව
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
INLAND REVENUE DEPARTMENT

ලේකම් අංශය
දේශීය ආදායම් ගොඩනැගිල්ල
ශ්‍රීමත් චිත්තම්පලම් ඒ ගාඩිනර් මාවත
තැ.පෙ. 515, කොළඹ 02
ශ්‍රී ලංකාව
දුරකථන :- 011-2334400/011-2135400
ෆැක්ස් :- 011-2337777

செயலகம்
உள்நாட்டு இறைவரிக் கட்டிடம்
சேர் சிற்றம்பலம் ஏ காடினர் மாவத்தை
த.பெ.இல. 515, கொழும்பு 02
இலங்கை
தொலைபேசி :- 011-2334400/011-2135400
பக்ஸ் :- 011-2337777

Secretariat
Inland Revenue Building
Sir Chittampalam A Gardiner Mawatha
P.O. 515, Colombo 02
Sri Lanka
Telephone :- 011-2334400/011-2135400
Fax :- 011-2337777
E-Mail : cgir@ird.gov.lk Web: www.ird.gov.lk

எனது இலக்கம்: CGIR/2019/03 - 1(Ins. & Cir) 09.07.2019

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண பிரதம செயலாளர்கள்,
மாவட்டச் செயலாளர்கள்/ அரசாங்க அதிபர்கள்,
பிரதான கணக்காளர்கள்,
கூட்டுத்தாபன, நியதிச் சட்ட நிறுவன, அரச முயற்சியாண்மை நிறுவன தலைவர்களுக்கும்.

**வழங்குநர்களுக்கு பெறுமதிசேர் வரியைச் (VAT) செலுத்துதல்**

அரச நிறுவனங்கள் மற்றும் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களினால் வழங்குநர்களுக்கு செலுத்தும் போது அச் செலுத்துதல்கள் மீதான குறித்த VAT தொகையானது, செயற்பாடற்ற வரி செலுத்துநர்கள் மற்றும் தற்காலிக VAT பதிவு செய்த ஆட்களுக்கு செலுத்தப்பட்டுள்ளதாக எனக்கு அறியக் கிடைத்துள்ளது. இதனூடாக அரச வருவாய் திரட்டும் போது உள்நாட்டு இறைவரித் திணைக்களம் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேரிடுகின்றது. அவ்வாறு செலுத்தப்பட்ட VAT தொகையை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பாது அரசுக்கு கிடைக்கப்பெற வேண்டிய அரசிறையை பிற ஆட்கள் பிடித்து வைத்துள்ளனர். ஆதலால், வழங்குநர்களுக்கு VAT தொகையை செலுத்தும் போது பின்வரும் விடயங்கள் தொடர்பாக அவதானம் செலுத்தும்படி கோரப்படுகின்றது.

1. வழங்குநர் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள வரி செலுத்துநர் அடையாள இலக்கமொன்றைப் (TIN) பெற்றுக் கொண்டுள்ளாரென அச் சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்த வேண்டியுள்ளதுடன், (VAT) தொடர்பாகவும் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

2. நிரந்தர VAT பதிவு செய்துள்ள ஆட்களுக்கு TIN இலக்கத்திற்கு இறுதியில் 7000 உப இலக்கம் உள்ளடங்குகிறது. VAT தொடர்பாக நிரந்தர பதிவினை பெற்றிருந்த போதிலும், செயற்பாட்டு வரிசெலுத்துநரென (Active) உறுதி செய்யப்படல் வேண்டும்.

3. TIN இலக்கத்திற்கு இறுதியில் 2525 உப இலக்கம் குறிப்பிடப்பட்டிருப்பின் அது தற்காலிக பதிவொன்றாகும். இவ்வாறான ஒரு நபருக்கு VAT செலுத்தப்படலாகாது.

4. அதற்கமைய நிரந்தர VAT பதிவினைக் கொண்டுள்ள, VAT தொடர்பாக செயற்பாட்டுக் கோவையொன்றை பேணுகின்ற வழங்குநர்களுக்கு மாத்திரம் குறித்த VAT தொகையை செலுத்துதல் வேண்டும்.

02. அதற்கமைய வழங்குநரொருவர் சம்பந்தமாக மேற்படி தகவல்களை உறுதிக் கொள்ளும் பொருட்டு, கீழே குறிப்பிட்டுள்ள வழிவகைகளை கடைப்பிடித்தல் வேண்டும்.

- வழங்கல் அனுமதியை வழங்குவதற்கு முன்னர்,

    1. வற் (VAT) வரி தொடர்பாக பதிவு செய்துள்ள நபர் செயற்பாட்டு வரி செலுத்துநரா என்பதனை பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு திணைக்களத்தினால் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

| | | | |
|---|---|---|---|
| தொழில் முயற்சி ஆலோசனை பிரிவு | திருமதி. எம்.பீ. அமரதுங்க | ஆணையாளர் | 011 2134251<br>011 2134284<br>011 2134253 |
| வாடிக்கையாளர் உதவி மற்றும் ஊக்குவிப்பு பிரிவு | திருமதி. எச்.பீ.ஏ.சந்ராணி | ஆணையாளர் | 011 2134250<br>011 2134223<br>011 2134222<br>**தொலைநகல்**<br>11 23338924<br>**ஈ மெயில்**<br>cir.csp@ird.gov.lk |

II. இதற்கு மேலதிகமாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் இணையத்தளத்தில் (www.ird.gov.lk) உள்ளடக்கப்பட்டுள்ள VAT கோவை செயற்பாடற்ற வரி செலுத்துநர்களின் பெயர்பட்டியல் மூலம் வற் வரி இலக்கம் செயலிழக்கப்பட்டதா என மேலும் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

- **செலுத்தலுக்கு முன்னர்,**
  வழங்குநரின் வற் பதிவு இலக்கமானது, செயற்பாட்டு மட்டத்தில் உள்ளதென உறுதிப்படுத்துவது தொடர்பாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வாடிக்கையாளர் உதவி மற்றும் ஊக்குவிப்பு பிரிவுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிக்கமைய தகவல்களை சமர்ப்பிப்பதன் ஊடாக கடிதமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கான வசதியுள்ளது.

| வழங்குநரின் பெயர் | முகவரி | VAT கோவையின் இலக்கம் |
|---|---|---|
| | | |

03. மேலும் வழங்குநர்களுக்கு செலுத்தப்பட்ட கொடுப்பனவு தொடர்பான தகவல்கள் பின்வரும் மாதிரிக்கமைய அனைத்து காலாண்டுகளிலும் (சனவரி – மார்ச்/ ஏப்ரல் - ஜுன்/ ஜுலை- செப்தெம்பர்/ ஒக்தோபர்- டிசெம்பர்) முடிவடைந்து அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் சிரேஷ்ட ஆணையாளரின், தகவல்கள் மற்றும் கட்டாயப் பதிவுப் பிரிவு, உள்நாட்டு இறைவரித் திணைக்களம், கொழும்பு 02 எனும் முகவரிக்கு அனுப்பவும்.

| தொடர் இலக்கம் | வழங்குநரின் பெயர் மற்றும் முகவரி | பெற்ற வழங்கள் விபரம் | TIN இலக்கம் | செலுத்தப்பட்ட திகதி | செலுத்திய தொகை | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | VAT இன்றிய தொகை | VAT | மொத்த தொகை (VAT உடன்) |
| | | | | | | | |

நதுன் குருகே
உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்

**Nadun Guruge**
**Commissioner General**
**Department of Inland Revenue,**
**Sir Chittampalam A.Gardiner Mawatha,**
**Colombo 02.**

பிரதிகள் - உள்நாட்டு இறைவரி திணைக்களம்

1. சிரேஷ்ட ஆணையாளர் - வரி உதவி சேவைகள் மற்றும் வாடிக்கையாளர் ஊக்குவிப்பு பிரிவு
2. சிரேஷ்ட ஆணையாளர் - தகவல்கள் மற்றும் கட்டாய பதிவுப் பிரிவு
3. ஆணையாளர் - வியாபார ஆலோசனை பிரிவு
4. ஆணையாளர் - வாடிக்கையாளர் உதவி மற்றும் ஊக்குவிப்பு பிரிவு
5. ஆணையாளர் - தகவல் பிரிவு